සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## சைவநெறி - ශෛව ධර්මය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. 'வெற்றி வேற்கை' எனும் நூலில் போற்றப்படும் கடவுள்
   1) சிவபெருமான் 2) விநாயகர் 3) முருகன் 4) விஷ்ணு

2. சிவனுக்குரிய விரதமாக அமையாதது,
   1) பிரதோஷம் 2) திருவாதிரை 3) திருக்கார்த்திகை 4) கேதாரகௌரி

3. நம்பியாண்டார் நம்பி அவதரித்த ஊரானது,
   1) திருநாரையூர் 2) திருக்கடவுள் 3) இளையான் குடி 4) திருவாமூர்

4. இளையான் குடிமாற நாயனார், பெருந்தொண்டாக கருதியது,
   1) குங்கிலியம் விற்றல் 2) திருவமுது படைத்தல்
   3) மனக்கோவில் கட்டல் 4) திருவிளக்கேற்றல்

5. பஞ்சபுராணம் பாடுவதனால் ஏற்படும் நன்மை,
   1) இறைபக்தி 2) ஆன்மீக உணர்வு 3) மனநிம்மதி 4) மேற்கூறிய யாவும்

6. திருஞான சம்பந்தர் தந்தையின் யாகத்தின் பொருட்டு பொன் கேட்டு பாடிய பதிகமாவது,
   1) 'ஓசையொலியெலாம்...' 2) 'இடரினுந் தளரினும்..'
   3) 'பூசுவதும் வெண்ணீறு..' 4) 'பித்தாபிறை சூடி..'

7. சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட திருமறை,
   1) திருப்பல்லாண்டு 2) பெரிய புராணம் 3) தேவாரம் 4) திருவாசகம்

8. ஆலய வழிபாட்டில் முதலில் வழிபடப்படும் கடவுள்,
   1) நடராஜர் 2) தட்சணா மூர்த்தி 3) வைரவர் 4) விநாயகர்

9. 'பாலறாவாயர்' என அழைக்கப்படும் நாயனார்,
   1) அப்பர் 2) சுந்தரர் 3) சம்பந்தர் 4) மாணிக்கவாசகர்

10. நாட்டார் வழிபாட்டில் வழிப்படப்படும் தெய்வங்களாவன,
    1) வைரவர் 2) ஐயனார் 3) மதுரைவீரன் 4) மேற்கூறிய யாவும்

(20 புள்ளிகள்)

- **சரி, பிழை கூறுக.**

11. ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்சத்துச் சதுரத்தசி தினத்தில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும் ( )
12. திருவாசகம், திருக்கோவையார் போன்றன எட்டாந் திருமுறையில் அடங்கும். ( )
13. மாணிக்கவாசக சுவாமிகளால் தேவாரம் பாடப்பட்டது. ( )
14. திருஞான சம்பந்தரும், மாணிக்க வாசகரும் ஒரு காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ( )
15. நாட்டார் வழிபாட்டை சிறு தெய்வ வழிபாடு எனவும் அழைப்பர் ( )

- **இடைவெளி நிரப்புக.**

16. ஆலயம் தொழுவது சாலவும் .................
17. அருணகிரி நாதர் .................. பாடினார்.
18. ........................ எளிமையான வழிபாட்டு முறையாகும்.
19. பதி,பசு, பாசம் என்பன ............................ ஆகும்.
20. தரும புத்திரர் ......................... யாகம் செய்தார்.

(அஸ்வமேத, கிராமிய வழிபாடு, நன்று, திருப்புகழ், முப்பொருள், உண்மை)

(10 புள்ளிகள்)

## பகுதி II

- வழங்கப்பட்டுள்ள வினாக்களுள் முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடையளிக்குக.

1. பின்வரும் பாடலடிகளுள் இரண்டினை தெரிவு செய்து, வரிப்பிழையின்றி எழுதுக.
   1) ‘இடரினுந் தளரினும்..’
   2) ‘ஓசை யொலியெலாம்...’
   3) ‘ஒளி வளர் விளக்கே...’
   4) ‘பித்தாபிறை சூடி....’

(16 புள்ளிகள்)

2. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
   1) ‘ஆலயம்’ எனும் சொல்லின் பொருளினை தருக.
   2) ஆலயத்தில் செய்யத்தக்க தொண்டுகள் 4 தருக.
   3) ஆலய வழிபாட்டை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் 4 தருக.

(3+4+4=11)

3. ‘சமயக்குரவர் சைவ சமயமே மெய்ச்சமயம் என்று நிலை நிறுத்தினார்’
   1) திருஞான சம்பந்தரின் பெற்றோர் பெயரை தருக.
   2) திருஞான சம்பந்தரின் வேறு பெயர்கள் 2 தருக.
   3) திருஞான சம்பந்தர் புரிந்த அற்புதங்கள் 5 தருக.

(2+4+5=11)

4. ‘உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகும்.’
   1) சிறுதெய்வ வழிபாடு இடம் பெறும் இடங்கள் 4 தருக.
   2) நாட்டார் வழிபாட்டில் இடம் பெறும் பெண் தெய்வங்கள் 3 தருக.
   3) நாட்டார் வழிபாட்டில் பூசை நிகழ்த்துபவர் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்?

(4+3+4=11)

5. ‘திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை’
   1) பஞ்சபுராணத்தில் அடங்கும் அருட்பாக்களை எழுதுக.
   2) பஞ்ச புராணம் ஓதும் சந்தர்ப்பங்கள் 3 தருக.
   3) பஞ்ச புராணம் ஓதும் போது பின்பற்றும் நடைமுறை யாது?

(5+3+3=11)

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) ஞானப்பிரகாச முனிவர்
   2) சித்திரைப் புத்தாண்டு
   3) பதி
   4) தருமம்

(11 புள்ளிகள்)